மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது பற்றி பல்கலைக் கழகம்தான் முடிவு செய்ய வேண்டும்.

Industrial Training Institutes for Physically Handicapped Persons

* 24. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state whether there is any proposal with the Government to form an Industrial Training Institute in each District for the physically handicapped persons?

உடல் ஊனமுற்றோர்க்கு தொழில் பயிற்சி நிலையங்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

உடல் ஊனமுற்றோர்க்கு தொழில் பயிற்சி நிலையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இல்லை.

Building for the Panchayat Office at Manamerkudi, Pudukkottai District

* 25. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any request for the construction of a building for the Panchayat Office at Manamerkudi, Pudukkottai District, has been received; and

(*b*) if so, the action taken thereon by the Government?

புதுக்கோட்டை மாவட்டம், மணமேற்குடியில் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு கட்டிடம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மணமேற்குடியில் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு கட்டிடம் கட்டவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்ததா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : அரசினரிடத்திலே இது குறித்து முறையீடு இருக்கிறது. ஊர் நல வளர்ச்சித் துறையிடம் கொடுத்திருக்கிறோம். கோரிக்கை இருக்கின்றது. நானேகூட அரசுக்குப் பரிந்துரை அனுப்பியிருக்கின்றேன். அன்பு கூர்ந்து அரசு அதைப் பரிசீலிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மணமேற்குடியில் பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவது சம்பந்தமாக அவர்கள் ரூ. 7,200 செலவழித்திருக்கிறார்கள். அவர்கள் சத்திர நிர்வாகத்திற்குச் செலுத்தியிருக்கிறார்கள். இப்போது வாடகைக்கு இருக்கின்ற கட்டடத்திற்காக இன்னும் ரூ. 9,900 பாக்கி இருக்கிறது. அந்த பாக்கியைச் செலுத்திய பிறகு அது ஒப்படைக்கப்படும்.

Travelling Allowance for Gramasevaks

* 26. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government from Gramasevaks for the increase of their Travelling Allowance; and

(*b*) if so, the action taken thereon by the Government?

ஊர்நல உதவியாளர்களின் பயணப்படி

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) ஊர்நல உதவியாளர்களின் பயணப்படியினைக் கூட்டுமாறு அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) மேற்கண்ட கோரிக்கையை அரசு நன்கு ஆய்வுசெய்து நிராகரித்துள்ளது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: நிராகரிப்பதற்குரிய காரணம் என்ன என்று அரசு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வேறு காரணம் எதுவும் இல்லை. நிதிநிலை தான காரணம். இருந்தாலும் அந்தக் கோரிக்கையை மீண்டும் பரிவுடன் பரிசீலனை செய்து தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிப்பதாக அரசு இருக்கிறது.

திரு. எல். பலராமன்: தற்போது கொடுக்கக் கூடிய ஊதியம் குறைந்தது என்ற காரணத்தினால், கோரிக்கை வந்திருக்கின்றது. அரசு அதை நிவர்த்திக்க மறு பரிசீலனை செய்ய இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: குறைந்தது, அதிகமானது என்பது அவரவர்களுடைய மனநிலையைப் பொறுத்தது. தேவைக்கு ஒரு அளவே கிடையாது.

திரு. ஜி. சுவாமிநாதன்: இப்போது என்ன பயணப்படி கொடுக்கப்படுகிறது, அவர்கள் இப்போது என்ன பயணப்படி கேட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தற்போது வழங்கப்பட்டு வரும் தொகை ரூ. 20. அதாவது முதல் நிலை ஊர்நல உதவியாளர்களுக்குப் பயணப்படி ரூ. 20, இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களுக்குப் பயணப்படி ரூ. 15 என்று இப்போது இருக்கிறது. அவர்கள் கேட்டிருப்பது முதல் நிலையில் இருப்பவர்களுக்கு ரூ. 40 என்றும், இரண்டாம் நிலையில் இருப்பவர்களுக்கு ரூ. 30 என்றும் கேட்டிருக்கின்றார்கள். அதாவது 'அன்ட்ரெட் பர்செனட் இன்கிரீஸ்' கேட்டிருக்கின்றார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இந்தப் பயணப்படி எந்தக் கால அளவுக்கு என்று அறிய விரும்புகிறேன். அந்த ஊர்நல உதவியாளர்கள் என்ன வேலைகள் செய்கின்றார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாதந்தோறும் பிக்ஃசட்டாக இந்த டி.ஏ. தரபபடுகிறது. அவர்கள் என்ன வேலைகள் செய்கின்றார்கள் என்பது நம் அனைவருக்கும் தெரிந்ததே.

Diploma-holders serving in the Electricity Departments of the Madurai Corporation.

* 27. *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Diploma-holders (L.E.E. or D.E.E.) serving in the Electricity Departments of the Madurai Corporation, have made an appeal to the Government to give them